செய்தி வெளியீடு எண் : 2349 நாள் : 25.11.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (25.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" கருத்தரங்கம் விழாவில் அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சி மற்றும் கருத்தரங்கினைப் பார்வையிட்டார்கள்.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக்காலங்களில் தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக நிறுவிய நிறுவனங்களின் சாதனைகளைப் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" கருத்தரங்கம் மற்றும் சிறப்பு புகைப்பட கண்காட்சி இன்று (25.11.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த சிறப்பான விழா நிகழ்வில் பங்கேற்று "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" என்கிற தலைப்பில் அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியின் ஒவ்வொரு அரங்கினையும் பார்வையிட்டார்கள். இந்த அரங்கில் கலைஞர் உருவாக்கிய நிறுவனங்கள், அவற்றின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் தொடர்பாக சிறப்பான புகைப்படங்கள் மற்றும் மாதிரி வடிவங்கள் இடம் பெற்றிருந்தன. பின்னர், கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" என்கிற தலைப்பில் முத்தமிழறிஞர் அவர்கள் உருவாக்கிய நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்த குறும்படத்தினைப் பார்வையிட்டார்கள். இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளைப் போற்றுகின்ற வகையில் சமூக அரசியல், கல்வி, மருத்துவம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற கருத்தரங்கினைப் பார்வையிட்டார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக்காலங்களில் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்கள். அவர் உருவாக்கிய முன்னோடி நிறுவனங்கள் மற்றும் தொழில் கல்வி சார்ந்த நிறுவனங்கள் என 51 அரங்குகள் கொண்ட சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இதனை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்" நூற்றாண்டு விழாக் குழுத்தலைவர் திரு.கே.என்.நேரு அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து சிறப்பு மலரினை வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், நூற்றாண்டு விழாக்குழு இணைத் தலைவர்கள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள்

மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், நூற்றாண்டு விழாக்குழு உறுப்பினர்கள் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்கள், வி.ஐ.டி.வேந்தர் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்கள், தாட்கோ தலைவர் திரு.உ.மதிவாணன் அவர்கள், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் செயல் தலைவர் மரு.எஸ்.சந்திரகுமார் அவர்கள், உறுப்பினர் செயலர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர், திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில், சமூகம் அரசியல் என்கிற தலைப்பில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்கள், கல்வித்துறை தலைப்பில் வி.ஐ.டி.வேந்தர் பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்கள், இலயோலா மேலாண்மை கல்வி நிறுவனத்தின் (LIBA) இயக்குநர் அருள் முனைவர் ஜோ அருண் சேச அவர்கள், மருத்துவத் துறை என்கிற தலைப்பில் அப்பல்லோ குழும மருத்துவமனைகள் துணைத்தலைவர் மரு.ப்ரீதா ரெட்டி அவர்கள், கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனை தலைவர் மரு.பேராசிரியர் எஸ்.இராஜசேகரன் அவர்கள், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் செயல் தலைவர் மரு.எஸ்.சந்திரகுமார் அவர்கள், தொழில் துறை என்கிற தலைப்பில் டி.வி.எஸ் மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்கள், இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் அ.சக்திவேல் அவர்கள், கெவின் கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு.சி.கே.ரங்கநாதன் அவர்களும் கருத்துரையாற்றினர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in